[25th October 1971

*President of the Sumaithangi Panchayat.*

* 25 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the President of the Sumaithangi Panchayat and others were arrested at Kaveripakkam near Ranipet about 24th May 1971; and

(b) if so, the details thereof?

**சுமைதாங்கி ஊராட்சி தலைவர்**

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்ககண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971 மே 24-ஆம் நாளன்று இராணிப் பேட்டைக்கு அருகில் காவேரிப்பாக்கத்தில் சுமைதாங்கி ஊராட்சித் தலைவரும், பிறரும் கைது செய்யப்பட்டனரா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) ஆம். வடாற்காடு சுமை தாங்கி கிராம ஊராட்சி மன்றத் தலைவரும், வேறு இருவரும் 23—5—1971 அன்று காவேரிப்பாக்கம் காவல் நிலையத்துக்குள் நுழைந்து, ஒரு தலைமைக் காவலரை அவர் தமது சட்ட பூர்வமான கடமையைச் செய்ய விடாமல் தடுத்தனர் என்றும் அவர்கள் ஒரு கைதியைக் காவலிருந்து விடுவிக்கவும் முயன்றனர் என்றும், அவர்கள் மீது வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு வாலாஜா துணை மாஜிஸ்டிரேட் முன்னால் விசாரணையில் உள்ளது.

*Fire Stations*

* 26 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of fire stations in Tamil Nadu as on 1st April 1971;

(b) the number of new fire stations proposed to be opened during the financial year 1971–72; and

(c) whether there is any proposal to open new fire stations in Aruppukottai and Mudhukulathur towns in Ramanathapuram district.

**தீயணைப்பு நிலையங்கள்**

திரு. எம். ராஜா அய்யர் (திரு. வி. தங்கபாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1—4—1971 அன்றுள்ளவாறு தமிழ் நாட்டில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன?

(இ) 1971-72-ஆம் நிதி ஆண்டில் புதிதாக எத்தனை நிலையங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன?

(உ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் ஆகிய நகரங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 58.

(இ) 3.

(உ) இல்லை.

திரு. எம். ராஜா அய்யர்: துணைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில் இந்த மாதிரி ஃபையர் ஸ்டேஷன்கள் இருக்கின்றன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். வேறு ஏதாவது ஊர்களில் இப்படி ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி, ராஜபாளையம், சிவகாசி, விருதுநகர் ஆகிய நகரங்களில் ஏற்கனவே தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. அருப்புக்கோட்டை தீயணைப்பு நிலையம் முன்னுரிமைப் பட்டியலில் இரண்டாவது இடம் வகிக்கிறது. இதைத் தவிர தேவகோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்கள் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றன.

திரு. எம். ராஜா அய்யர்: கிழக்கு ராமநாதபுரத்தில் அந்த நகரங்கள் இல்லாததால், கிழக்கு ராமநாதபுரத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படும்போது காரைக்குடி, விருதுநகரிலிருந்து வரவேண்டியிருக்கிறது. சிவகங்கைக்கு முக்கிய இடம் கொடுத்தால், கிழக்கு ராமநாதபுரத்திற்குத் தீயணைக்கும் மோட்டார் வருவதற்கு சௌகரியமாக இருக்குமென்பதை அரசாங்கம் கவனிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கம் இதை ஒரு குறிப்பாக கொண்டு நிதிநிலைக்கு ஏற்றவாறு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க முயற்சிசெய்யும்.

### *Seminar on Educational Planning*

* 27 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any seminar was conducted at Coimbatore by the State Government on Educational Planning during May 1971;

(b) if so, the parties that collaborated in this venture; and

(c) the details of the work done by this Seminar?